**ORIGINAL ARTICLE**

# எதிர்காலத் தலைமுறையினரிடம் தமிழ்ச் சைவ சமய உணர்வைப் பெருக்குவதற்கான வித்தும் விளைவும் [ETIRKĀLAT TALAIMUṞAIYIṈARIṬAM TAMIḶC CAIVA CAMAYA UṆARVAIP PERUKKUVATAṞKĀṈA VITTUM VIḶAIVU]

# STRATEGIES AND METHODS TO EFFECTIVELY ROOT SAIVISM AMONG OUR FUTURE GENERATION

**அகல்யா தர்மலிங்கம் / Agalya Dharmalingam*[1]**
**சில்லாழி கந்தசாமி / Silllalee S.Kandasamy[2]**

[1] Department of Indian Studies, University of Malaya, Malaysia.
Email: agalyadarma@gmail.com
[2] Department of Indian Studies, University of Malaya, Malaysia.
Email: silllalee@um.edu.my

*Corresponding author

DOI: https://doi.org/10.33306/mjssh/303

**Abstract**

The term 'Samayam' in Tamil language refers to a process which nurtures souls into maturity and differentiates humans from animals. It is also said to elevate an average one to become a Godlike being. Here, Godliness is that one becomes highly aware of his/her self and the cosmological realm; realizing one's ultimate Saviour Sivam; becoming an invincible compassionate being in this world. However, the contemporary world has brought severe abatement upon a pious lifestyle. The Saivite exponents who have foreseen these social symptoms have left us with insights and possible ways to instill Saivism to the future generations. Furthermore, Periyapuranam greatly exhibits how a child can be gradually introduced to Saivism commencing from even before the day of conception and continuing throughout life. The aim of this study is to ascertain established methods used in Periyapuranam in instilling Saivism into the future generation which are also applicable in present times.

**Keywords**: Saivism among Future Generations, Periyapuranam, Religious Consciousness, Saivism, Religion among Younger Generations

**ஆய்வுச் சாரம்**

மாந்தரை மாக்களிலிருந்து வேறுபடுத்தி சமைப்பது சமயம். எனவே சமயம் என்பது ஒருவரைப் பக்குவப்படுத்துவது அல்லது பண்படுத்துவது ஆகும். சராசரி நிலையில் வாழும் மாந்தனை

இறைநிலை எய்திட செவ்வியுறச் செய்வதும் சமயமே! இறைநிலை என்பது மாந்தன் தன்னையும் தன்னைச் சுற்றி இருக்கும் இதர நுகர்ச்சிப் பொருள்களையும் தான் சென்று சார வேண்டிய சிவத்தையும் உணர்ந்து; இத்தரணியிலேயே அன்புப் பிழம்பாய், மாந்தரில் மாணிக்கமாய் திகழ்வதேயாம். நவீன உலகத்தைத் துரத்தியோடும் கால மாற்றம், தற்போது சமயம் சார் வாழ்வியலை நலியச் செய்துள்ளது. இதை அன்றே நன்குணர்ந்த திருமுறை ஆசிரியர்கள் வரும் தலைமுறையினருக்குச் சைவ சமயத்தை எடுத்துச் செல்லும் முறையினை விரிவாக இயம்பியுள்ளனர். ஒரு குழந்தைக்குக் கருவுற்ற நாள் முதலே தொடங்கி வாழ்நாள் முழுவதும் தொடர்ந்து சைவ சமயத்தை எப்படியெல்லாம் படிப்படியாக அறிமுகம் செய்யலாம் என்று வாழ்ந்தும் காட்டியுள்ளனர். இந்த ஆய்வின் நோக்கம், பெரியபுராணத்தில் சைவ சமயத்தை எதிர்கால சந்ததியினரிடம் புகுத்துவதற்குப் பயன்படுத்தப்பட்ட முறைகளைக் கண்டறிவதே ஆகும்.

**கருச்சொற்கள்**: எதிர்காலத் தலைமுறையினரிடம் சைவம், பெரியபுராணம், சமய உணர்வு, சைவ சமயம், இளையத் தலைமுறையினரிடையே சமயம்

This article is licensed under a Creative Commons Attribution-Non Commercial 4.0 International License

Received 25th May 2024, revised 27th June 2024, accepted 15th July 2024

## முன்னுரை

உயிர்கள் எண்ணிலி என்பது சித்தாந்தச் சைவத்தின் அடிப்படை. உயிர்களைப் பற்றி நமக்குச் சித்தாந்த சாத்திரத்தின் வழி விவரித்த ஆசான் உமாபதிசிவம் இதுவரை உயிர்கள் பிறந்துள்ள நாட்களுக்கும், இனி பிறக்கவிருக்கும் நாட்களுக்கும் எப்படிக் கணக்கில்லையோ அதுபோல இதுவரை வீடு பேறு அடைந்துள்ள உயிர்களுக்கும் இனி வீடுநிலையை அடையவிற்கும் உயிர்களுக்கும் அளவு சொல்ல இயலாது என்பதைப் ‘பிறந்தநாள் மேலும் பிறக்கும் நாள் போலும் துறந்தோர் துறப்போர் தொகை' என்ற குறளில் குறிப்பிடுகின்றார் (உயிரவை நிலை:திருவருட்பயன்:1). மேலும் இக்குறட்பாவில், ஆசான் உமாபதிசிவம் பிறந்தநாள் என்றும் பிறக்கும் நாள் என்றும் குறிப்பிடுவதாவது அடுத்த தலைமுறையினர் என்போர் ஏற்கனவே முந்தைய நாட்களில் பிறந்துள்ள குழந்தைகளையும் இனி வரும் காலங்களில் பிறக்கவிருக்கும் குழந்தைகளையும் எனலாம். வித்து நன்றாக இருந்தால்தான் முளைத்துச் செழிப்பான மரமாக வளர முடியும். அதே போலத்தான் சமய உணர்வும் வித்திலேயே ஆழமாக வேரூன்றப்படுவது மிக அவசியம். இதைத்தான் பண்டையச் செந்தமிழர் "விளையும் பயிர் முளையிலே தெரியும்' என்றிருக்கின்றார்கள்.

## குழந்தைகளைப் பெற விரும்புவோரின் மனநிலை

சித்தாந்தச் சைவ மெய்யுணர்வு கோட்பாடு ஒரு இணையர் மக்கள் பேற்றைப் பற்றி சிந்திக்கும் பொழுதே என்ன வகையானச் சிந்தனை இருந்தால் எவ்வகையானப் புதல்வர்களைப் பெறுவார்கள் என்று பல்வேறு இடங்களில் பதிவிட்டிருக்கின்றது. சித்தாந்தச் சைவ சாத்திரத் தலைமணி நூலை இயற்றிய மெய்கண்ட தேவரின் வரலாற்றில் இச்செய்தி

காணக்கிடைகின்றது. சிவஞான சித்தியார் எனும் சாத்திர நூல் இரண்டே வயது கொண்ட பாலகன் மெய்கண்டாரை 'மெய்கண்ட தேவன் மிகு சைவ நாதன்' (சிவஞானசித்தியார்:மங்களவாழ்த்து:6) என்றும் சிவஞானபோதம் எனும் நூல் சிறப்புப் பாயிரத்தில் 'சுவேதவனன் பொய் கண்டு அகன்ற மெய்கண்ட தேவன்' (சிவஞானபோதம்:சிறப்புப்பாயிரம்) என்றும் சுட்டுகின்றது. இதன்வழி மெய்கண்டார் இரண்டே வயது உடையவராயினும் அவர் மிகவும் ஆழமான சித்தாந்த மெய்யுணர்வு பெற்றிருந்தார் என்றும் அம்மழலை பருவத்திலேயே அவர் மிகுந்த இறையியல் சிந்தனைத் தெளிவை பெற்றிருந்தார் என்பதும் புலப்படுகின்றது. மேலும், முன்னுரையில் குறிப்பிட்டதற்கிணங்க உயிர் பல பிறவிகளைக் கடந்து மெய்ஞான அறிவைச் சேகரித்துப் பயணிப்பதாலேயே மெய்கண்டாருக்குக் குழந்தையிலேயே மெய்ஞானம் கைகூடிற்று என்பதும் தெளிவாகின்றது. அது ஒரு புறமிருக்க இவரின் பெற்றோர்களின் தகுதி அல்லது எண்ணம் தான் என்ன என்று ஆராய்தோமேயானால் மெய்கண்டாரின் வரலாற்றை மிகத் துள்ளியமாக விவரிக்கும் கடந்தைப் புராணம், 'கடந்தை நகரில் வேளான் உயர்குலம் செய் பெருந்தவம் ஓர் உரு உற்று ஆங்கு வாங்குதிரை கடல் உலகில் வந்து தோன்றி' என்கின்றது; மெய்கண்டாரை ஈன்ற பெற்றோர் தவச்சீலர்கள் என்று பதிவிடப்படுகின்றனர். மெய்கண்டாரின் தந்தை அச்சுதகளப்பாளர் குழந்தைப் பெற அவரின் குல குருவை சந்தித்து, இறைவனின் திருகுறிப்பு வேண்டி, திருஞானசம்பந்தரின் பதிகம் 'பேயடையா பிரிவெய்தும்' என்ற பதிகத்தை மனையாளுடன் ஏத்தி, திருவெண்காடு என்ற சிவத்தலத்திற்குச் சென்று முக்குளநீராடிப் பல நாள் வழிப்பட்டே மெய்கண்டார் பிறக்கின்றார் (அரங்கச்சாமி பிள்ளை.எஸ், 1958)

பெரியப்புராணத்தில் மக்கள் பேற்றை எடுத்துக்காட்டும் வரலாறு மானக்ஞ்சாரனார் திருவரலாறு. அவருக்குச் சைவ சமயத்தில் அதித்தீவிரம் கொண்ட திருப்புதல்வி. சேக்கிழார் பெருமான் அப்பெண்ணைக், "கூத்தனார் அருளாலே.. பெருங்கற்பின் மனைக்கிழத்தியார் தம்பால் இழைக்கும் வினைப்பயன் சூழ்ந்த இப்பிறவிக் கொடுஞ்சூழல் பிழைக்கும் நெறி தமக்கு, தவப் பெண்கொடியைப் பெற்றெடுத்தார்" எனச் சித்தரிக்கின்றார் (பெரியபு.12:12:.11). அப்பெதும்பை அவளது பெற்றோர்களை நீங்காமல் பன்மடங்காகப் பெருகி வரும் வினைப்பயனால் இளைக்காத பிறவி எனும் கொடியச் சுழற்சியினின்றும் தப்பி உய்கையைக் கூட்டித் தரக்கூடிய நங்கை என்று உறுதியிட்டுக் கூறுகின்றார் சேக்கிழார். இப்படியான இயல்பைக் கொண்ட பெண்ணைப் பெற்றெடுத்தத் தாயோ "பெருங்கற்பின் மனைக்கிழத்தியார்". தமிழ்ச் சைவர் மரபில் உயர் கற்பு என்பது ஒரு பெண் மேற்கொள்ளும் இல்லறத்தை நல்லறமாக அயரா இறைவழிபாட்டொடு கூடிய வாழ்வியலேயாம். இதனையே தவம் என்று அறிவதும் இயல்பு. அப்பெண்ணின் தந்தையோ " மெய்பொருளை அறிந்துணர்ந்தார்… மானக்கஞ்சாரனார்" (பெரியபு.12:12:7) என்றும் "பணியினொடும் பனிமதியினொடும் அணிவுடைய சடைமுடியார்க்கு ஆளாகும் பதம் பெற்ற தணிவில் பெரும் பேருடையார்" (பெரியபு. 12:12:8) என்றும் "தம் பெருமான் கழர்ச்சார்ந்த துணிவுடை தொண்டர்க்கே ஏவல் செய்யும் தொழில் பூண்டார்" (பெரியபு.12:12:8) என்றும் சொல்லப் பெறுகின்றார். மேலும், இப்படியாக நற்றவம் உடைய பெற்றோர் இறைவனிடத்தே விண்ணப்பித்து ஈன்ற தவப்புதல்வி அப்பெதும்பை என்பதை மிகத் தெளிவாகச் சேக்கிழார் பெருமான் "வருமகவு பெறற்பொருட்டு மனத்தருளால் வழுத்தினார்" என்ற வரிகளின் மூலம் நிறுவுகின்றார் (பெரியபு.12:12:10).

மேற்குறிப்பிடப்பட்ட இணையர் இருவருமே அருந்தவச் செல்வர்களை ஈன்றெடுக்க அவர்களது அன்றாட வாழ்வைச் சித்தாந்த சைவ மெய்யியல் கோட்பாடுகளை உயர் பற்றோடு பின்பற்றியது மட்டுமின்றி மக்கள் செல்வத்தை வேண்டும் பொழுதுமே இறைச்சிந்தனை

மாறாமல் இருந்திருப்பது தெளிவு. அந்த வித்திலிருந்து விளைந்ததுவே சந்தானக்குரவரான மெய்கண்டார் மற்றும் பெற்றோர்க்கு வீடுபேறு கிட்டித் தந்த மானக்கஞ்சாரர் திருமகள். ஆகயால் நாமும் நம்வாழ்வில் இறைச் சிந்தனை உடையக் குழந்தைகளை ஈன்றெடுக்க பெற்றோர்களாகும் முன்னமே இறைச்சிந்தனையோடு இருத்தல் அவசியம்.

**கருவில் சைவ சமய உணர்வு**

பல அறிவியல் ஆய்வுகள் கருவுற்றகாலத்தில் தாய் உணருகின்ற உணர்வை, அதே தீவிரத்துடன் (intensity) சூழ் கொண்டிருக்கும் குழந்தையும் உணர்கின்றது; எ.கா ஒரு தாய் அழுவாளேயானால் குழந்தையும் அதே அளவிலான சோகத்தை உணர்கின்றது என்கிறார்கள். கருவுற்றகாலம் முழுவதும், ஒரு குழந்தைத் தொடர்ந்து தன் தாயின் நஞ்சுக்கொடியின் வாயிலாக பரிமாறப்படும் இரசாயன (chemicals) மற்றும் இயக்குநீர் சமிக்ஞைகளின் (hormonal signals) மூலம் சுவை, நறுமணம், இசை என்று பலவகையானச் செய்திகளைப் பெறுகின்றன. முக்கியமாக, இச்சமிஞைகள் தாயின் உணர்ச்சி நிலைக்கு நேரடியாக இணைக்கப்பட்டவையாகவும் இருக்கின்றது. இதன் மூலம்தன் கருவிலேயே குழந்தை வெளியுலக வாழ்விற்குத் தன்னைத் தயார்ப்படுத்திக் கொள்கிறது என்றும் ஆய்வுகள் ஆவணப்படுத்துகின்றன (ஆடம் ஏஷில்மன், 2009).

இதைத் தமிழ் சைவர்களின் கூற்றோடு பொருத்திப்பார்க்கையில், திருமூலர் இதற்கு விளக்கம் தருகின்றார். ஒரு கருவிற்கு மண முதல் புருடன் ஈறாக உள்ள இருபத்தைந்து கருவிகளும் (தத்துவங்களும்) தந்தை உடலிலே பொருந்தியிருந்து, பின் தாயது கருப்பைக்குள்ளே, ஆண், பெண் இரண்டில் யாதேனும் ஓர் உருவமாமாறு புகும் என்று 'கருவை ஒழித்தவர்.. மூவேழ் புருடன் உடலில் பொருந்தும்மற் றோரார் திருவின் கருக்குழி தேடிப் புகுந்த" (திருமந்திரம்:10:2:451-454) என்ற வரிகளில் தெளிவிக்கின்றார். அறிவியலுக்குச் சற்றுக் கூடுதலாகச் சித்தாந்த சைவம் 36 தத்துவங்கள்/புலன்கள் என்ற அடிப்படையில் ஓர் உயிரணு விந்தாகக் தாயின் கருப்பைக்குள் புகும் போதே அதற்கு 25 அறிகருவிகளோடு கற்கும் பயணத்தைத் தொடங்குகின்றது என்று விவரிக்கின்றார். நம்மில் பலருக்கு இதன் அடைவு பற்றி ஐயம் எழுமாயின், திருநாவுக்கரசரோ அவரது பாடலில் அவரது அனுபவத்தை “கருவுற்ற நாள் முதலாக உன் பாதமே காண்பதற்கு உருகிற்று என் உள்ளமும் உடலும்" (திருநாவுக்கரசர் 4:100:6) என்றும் "கருவாய் கிடந்துன் கழலே நினையும் கருத்துடையேன்" (திருநாவுக்கரசர் 4:95:6) என்றும் கூறுகின்றார். நாவுக்கரசருக்கு அவரது தாயின் கருவில் இருக்கும் போதே இறைச் சிந்தனையும் அப்பரம்பொருளைத் துதித்து ஏத்தும் எண்ணமும் விளைந்திருப்பது காணக்கிடைகின்றது. இதன் மூலம் சித்தாந்த சைவத்தின் மெய்யியல் கோட்பாடு கருவிலேயே தாய் தந்தை கொண்ட சமய சிந்தனை உருக்கொள்ள இருக்கும் குழவிக்கு எட்டும் என்பதைப் புலப்படுகின்றது.

இவர்கள் கருவிலேயே இறைச் சிந்தனையைக் கொண்டிருப்பது எவ்வாறு? அவர்களின் பெற்றோர் செய்த முன்செய் தவமே அதற்குக் காரணம். இறை உணர்வு பொருந்திய பிள்ளைகளைப் பெற்று எடுக்க வேண்டுமாயின் கருவுற்ற காலத்தே தாய் நிறைய ஆழ்ந்த சைவ சமய நூல்களை வாசித்தல், வழிபாடு செய்தல், சொற்பொழிவுகளைக் கேட்டல், கோவில்களுக்குச் செல்லுதல் பொன்ற இறைக் கரணங்களில் தம்மை ஈடுபடுத்திக்கொள்வது இன்றி அமையாததாகும்.

### தாய்ப்பால் ஊட்டல்

பிறந்த குழந்தைகளின் முதலான உணவு தாய்பால். இதனால்தான் இறைவன் ஒரு சேய்க்குத் தேவையான ஊட்டச்சத்துக்கள், நோய் எதிர்ப்பு சக்தி, உளவியல் வளர்ச்சி என பல எண்ணிலடங்கா நன்மைகளை ஒரு தாய் சூழ் கொண்ட காலத்தே தொடங்கி அவளது குருதியைக் குழந்தைக்குத் தேவையான உணவாய் மாற்றி சேமித்து வைக்கின்றார். இதன் முகான்மை உணர்ந்த உலகச் சுகாதார அமைப்பும் அமெரிக்க சிறார் நல மருத்துவ ஆய்வுக்கூடமும் பிறந்து 6 மாதம் வரை தாய்பாலை மட்டுமே குழந்தைகள் உட்கொள்ள வேண்டுமாய்த் தாய்மார்களுக்கு வன்மையாகப் பரிந்துரை செய்வது மட்டுமல்லாமல் அதனை நடைமுறைப்படுத்த தீவிர முயற்சிகளை மேற்கொள்வதைக் காண்கின்றோம். இப்படி அறிவியல் மற்றும் மருத்துவம் சார்ந்தோர் தாய்பாலின் செம்மையினைப் பற்றிப் பல செறிவான ஆராய்ச்சிகளைத் தொடர்ந்து மேற்கொண்டிருக்கும் வரிசையில், தற்போது 2 கொரிய சிறார் நல மருத்துவ நிபுணர்கள் தாய்ப்பால் குழந்தைகளுக்கு உணவாகவும் ஊட்டச்சத்துக் களஞ்சியமாக மட்டுமின்றி exclusive breastfeeding எனப்படும் நேரடியாகத் தாய் தன் மார்பில் இருந்து பால் பருகும் குழந்தைகளின் நுன்னறிவாற்றல் (cognitive development) தூண்டப்படுவதோடு சேய்க்கும் தாய்க்கும் இடையிலான உணர்வு பரிமாற்றத்தையும் (emotional corner) மிக ஆழமாக நிறுவுகிறது என்று கண்டறிந்துள்ளனர் (Kyung Yeon Lee, Ja Heong Kim, 2016).

சித்தாந்தச் சைவம் ஒருவரின் உணர்வுடன் மிக அணுக்கமானத் தொடர்புடையது. ஆகையால் ஒரு தாய் சீரிய முறையில் சைவத்தில் திளைத்திருக்கும் சூழலில் அவளின் எண்ணமும் உணர்வும் அதிலேயே தோய்வுற்று இருக்கும். குழந்தைப் பிறந்து சில மணித் துளைகளிலேயே பால் குடிக்கத் தொடங்கும். அக்காலம் தொடங்கி அதே இறைச் சிந்தனையோடேயும் பக்தி உணர்வோடும் ஏறத்தாழ இரண்டாம் அகவை வரை பாலூட்டும் தாயின் சைவ சமயப் பற்றினைக் குழந்தை மெல்ல உள்வாங்கிக் கொள்ளும் வாய்ப்பு சாத்தியப்படுகின்றது. இதை நமக்கு கண்கூடாகக் காட்டியவர் திருஞானசம்பந்தரின் தாய் பகவதி அம்மையார். சேக்கிழார் பெருமான் திருஞானசம்பந்தரின் வரலாற்றைப் பதிவிடும் போது இந்த அரிய செய்தியை நமக்குப் புலப்படுத்துகின்றார். சேக்கிழார் பெருமான் விளக்குவதாவது, திருஞானசம்பந்தரின் தாயரான பகவதி அம்மையார் சம்பந்தருக்கு, 'பரமர்தாள் பரவும் அன்பே திருமுலை சுரந்து அமுது செய்தருளுவித்தார்' (திருஞா.பு.செ.42) என்று குறிப்பிடுகின்றார். குழந்தையைப் பெறும் தாய்மார்கள் இறைச்சிந்தையிலேயே முலைப் பால் ஊட்ட வேண்டும் என்பது சித்தாந்த சைவத்தின் கருத்து.

### தாலாட்டு

படிப்படியாகக் குழந்தையை வளர்த்து வரும் தாயின் அன்பின் அடுத்த வடிவம் தாலாட்டு. ‘தாய் ஆழங்காண முடியாத அன்புக்கடல். அக்கடலில் விளைந்த வலம்புரி முத்தே தாலாட்டு’ என்கிறார் டாக்டர் ஆறு. அழகப்பன் (சு. சக்திவேல், 2010). ஒரு தாயின் நேசமும் அவளது குழந்தையின் எதிர்காலத்தை ஒட்டிய மனக்கோட்டையின் வெளிபாடும் தான் தாலாட்டு என்கிறார் நா. வனமாமலை (1981). எனவே தான், தாய்மை உலகிற்கு வழங்கிய முதல் இலக்கியப் பரிசு என்று தமிழண்ணல் தன் ஆய்வுக்கட்டுரையில் தாலாட்டு பாடல்களின் மேன்மையைப் பறைச்சாற்றுகின்றார். மேலும், உள நூல்கள் தாலாட்டின் இசை, குழந்தையின் மன அமைதிக்கு வித்திடும் அதே வேளை அதில் சொல்லப்படும் கருத்துக்கள் அரை உறக்கத்தில் இருக்கும்

குழந்தைகளின் மனதில் இன்னும் ஆழமாகப் பதிவதாக குறிப்பிடுகிறது என்கின்றார். தாலாட்டில் தாய்மையின் தவிப்பும் பூரிப்பும் எதிர்பார்ப்புகளும் வைகறையின் வசந்தங்களும் இறைவனின் இனிய நாமங்களும் வரலாற்றுப் பெட்டகங்களும் நிறைந்திருப்பதைக் காணலாம் என்கிறார் டாக்டர் சு. சக்திவேல் (2010).

இளமையில் கல்வி சிலைமேல் எழுத்து என்பது நமது மூத்தோர் சொல். இதனைச் சிந்தனையில் கொண்டு சூழ் கொண்ட காலம் தொட்டே சிறார் பருவம் முழுவதும் குழந்தைகளுடன் பயணிக்கும் இத்தாலாட்டினை நூதனமாக நம் குழந்தைகளுக்குச் சைவ சமயத்தைப் போதிக்கப் பயன் படுத்திக்கொள்ள முடியும். இதன் வழி சமய சிந்தனை மிகச் சிறிய வயதிலேயே குழந்தைகளிடம் வித்திடப்படச் சாத்தியமாகின்றது. இதனையே திருஞானசம்பந்தரின் தாய் பகவதி அம்மையார் செய்திருக்கின்றார். 'திருமறையுந் தீந்தமிழும்சிறக்க வரு நாயகனைத் தாலாட்டு நலம் பல பாராட்டினார் (திருஞா.பு.செ.44) என்கின்றார் சேக்கிழார். குழந்தைச் சைவ சமய உணர்வில் சிறக்க வேண்டுமானால் தாய் பக்தி சுவை ததும்ப திருமுறை இசைப்பாடல்களைத் தாலாட்டாகப் பாடுதல் வேண்டும். பாட இயலாதவர்கள் திருமுறை இன்னிசை குருவட்டுகளைக் கொண்டோ அல்லது இணையத்தின் வழியோ இவ்விறையிசையைக் குழந்தைகள் கேட்கச் செய்ய வேண்டும்.

**கதை சொல்லல்**

கதை சொல்லும் மரபு குழந்தை வளர்ப்பில் ஒரு இன்றி அமையாதப் பங்கை வகிக்கின்றது. பண்டைய காலம் தொட்டே கதை சொல்லும் தகவல் பறிமாற்ற முறை இவ்வவணி கண்ட அனைத்து நாகரீகத்திலும் இனக்குழுவிழும் இருந்து வந்த ஒன்று. குழந்தைகளுக்கு அவர்கள் வாழ எத்தனிக்கும் இந்த உலகத்தைப் பற்றிய செய்திக் களஞ்சியமாய்த் திகழ்வது கதைகள். வாழ்வின் உண்மை நிகழ்வுகளை, எதார்த்தங்களைத் தத்துருவமாகக் கற்பனையின் வழி சித்தரித்து உணரச் செய்யக் கூடிய வலிமை கொண்டது கதைகள். சுருங்கக் கூறின் கதைகள் வழிக் கற்றுக்கொள்ளும் செய்திகளை நடைமுறை வாழ்வில் பின்பற்றுவது குழந்தைகளுக்கு மிக எளிது. நம் வாழ்க்கைப் பயணத்தில் எதிர்நோக்க சாத்தியமுடையப் பலவகையான சூழல்களை எதிர்கொள்ளும் விதிகளை முன்னமே குழந்தைகளுக்குச் சொல்லிக் கற்றுக்கொடுக்கும் சிறப்பியல்பை ஏற்ற ஒரு கலை தான் கதைச் சொல்லுதல் (பமேலா ரூத்லெட்ஜ், n.d). தவிர கதைகள் வழி பண்பாட்டுக் கூறுகளையும், நற்பண்புகளையும் சமயத்தையும் எளிமையாகப் புகுத்திவிடலாம் என்றும் கதைகள் கேட்டபதன் மூலம் சிறார்களிடையே இப்புவியைப் பற்றி ஆழ்ந்து அறிந்துக்கொள்ளும் ஆர்வத்தையும் தூண்ட முடிகின்றது என்றும் உளவியல் ஆய்வுகள் நிறுவுகின்றன (வாசிக் & பாண்டு, 2001).

இவ்வளவு ஆற்றல் வாய்ந்த கதை சொல்லும் கலையைச் செந்தமிழ்ச் சைவர்கள் ஒரு மாந்தனின் தோற்றம் தொட்டு இறுதி வரை பலவகையில் அறிவைப் பெருக்கிக்கொள்ளும் சாதனமாகப் பயன் படுத்தியுள்ளனர்; அதுவும் குழந்தை வளர்ப்பில் கதைகளுக்குப் பெறும் இடம் ஒதுக்கித் தந்துள்ளனர். கருவுற்றக் காலத்தேயே பெற்றோர் சூழ் கொண்டிருக்கும் குழவிக்குக் கதையைச் சொல்லி வந்தாலும், குழந்தைப் பிறந்து 18 திங்களில் விரிவான விவரமானக் கதைகளைக் கேட்கும் பக்குவத்தை அடைந்திருக்கும் என்று நவீன அறிவியல் நிலைநாட்டுகின்றது (ரெபேக்கா & சேரா, 2019). இதனைச் சைவ சமய வித்தாக்கி நம் சமயத்தை அடுத்த தலமுறையினருக்கு எடுத்துச் செல்லும் ஊடகமாக பயன்படுத்திக்கொள்ளுதல் அறிவுத் தெளிவுடைமையாகும்.

சைவ சமயக் கதைகள் எனில் தமிழ் சைவர்களுக்கு அருள் கொடையாய்த் திகழ்வது 63 நாயன்மார்களின் வரலாறானப் பெரியபுராணம், சிவபெருமானின் அருள் செயல்களைப் பகரும் திருவிளையாடல் புராணம் மற்றும் பல. இக்கதைகளை நாம் நம் குழந்தைகளோடு பகிர்ந்து கொள்ளலாம். எ.கா பெற்றோர்கள் திருஞானசம்பந்தர், மெய்கண்டார், சண்டீசுவரர் போன்றோர் சிறு வயது முதலே சித்தாந்த சைவத்தை விரும்பி கற்றிருந்ததைச் சொல்லலாம். சண்டீசுவரர், காரைக்கால் அம்மையார், மார்கண்டேயர் போன்றோர் குழந்தைப் பருவத்திலேயே இறைவன் மீது கொண்டிருந்த அளப்பிலா அன்பினைத் தெளிவிக்கலாம். நவீனக் காலத்து பெற்றோர்கள் இம்மாதிரியானக் கதைகள் தற்போதையக் காலத்துடன் இணங்காமல் சிவத்தை மட்டுமே விவரிக்கும் என்ற அச்சத்திலிருந்து விலகி, நல்ல மக்களின் மாதிரியாக விளங்கும் அப்பூதி அடிகளின் மகன் மூத்த திருநாவுக்கரசுவை அறிமுகம் செய்யலாம். தமக்கை தம்பியின் நல்லுறவையும் அன்பு பாரட்டும் முறையையும் எடுத்து இயம்பும் திலகவதியார் திருநாவுக்கரசரின் உறவை எடுத்துச் சொல்லலாம். காரைக்கால் அம்மையாருக்கு அவரின் கணவர் கொடுத்தச் சுதந்திரத்தை, அவரின் முற்போக்குச் சிந்தனையைக் குழந்தைகளுக்கு உணரச் செய்யலாம். பெற்றோரின் சிவத்தொண்டு வெற்றியுறப் பக்கத்துணையாக இருந்த மானக்கஞ்சாரர் மகளைச் சொல்லலாம். இப்படியாகப் பெரியபுராணத்தின் காலத்தையும் முதன்மைக் கருவையும் மட்டுமே கண்டு அதனை தொன்மையானது என்று ஒதுக்கிவிடாமல் பன்முகப்பார்வையுடன் அணுகினால் இக்காலத்திற்கும் எக்காலத்திற்கும் பல அரிய கதைகள் நமக்குப் புலப்படும். இதன் வழி நம் தமிழ்ச்சைவ சிறார்கள் சமயத்தைத் தெரிந்துக் கொள்வதோடு நற்பண்புகள், இயற்கை எழில், நமது கலை, பண்பாடு, நம் முன்னோர் வரலாறு என்று பலவற்றைத் தெரிந்துக்கொள்வர்.

**கல்வி**

ஆதி முதலே நம் செந்தமிழ் முன்னோர் கற்றலை மிக முகான்மையாகக் கருதியுள்ளனர். முன்றுறை அரையனார், 'ஆற்றும் இளமைக்கண் கற்கலான் மூப்பின்கண் போற்றும் எனவும் புணருமோ!' என்று இளமையில் கற்றல் அவசியம் என்பதை இடித்துறைத்துள்ளனர். வள்ளுவரும் ஔவை பிராட்டியும் கல்லாதவரின் கண்கள் புண்களுக்குச் சமம் என்கின்றனர். அதிலும், கல்வியின் பயன் இறையறிவே என்பதனை வள்ளுவ பேராசான், 'கற்றதனா லாய பயனென்கொல் வாலறிவன் நற்றாள் தொழாஅ ரெனின்' என்று தெளிகிறார் (திருக்குறள். 1:2). சித்தாந்த சைவத்தைப் பொருத்த மட்டில் கல்வி என்பதே மெய்யியலான இறைவனைப் பற்றியதுவே! நிற்கின்ற போதே நிலையுடை யான்கழல் கற்கின்ற செய்மின் என்கின்றார் திருமூலர் (திருமந்திரம்,10:1:23:3). ஒருவருடைய உடலில் உயிர்ப்பு இருக்கும் பொழுதே இறை ஞானத்தை தேடி கற்கவேண்டும் என்கின்றார்.

குழந்தை வளர்ந்து கல்வி கற்கும் பருவத்தை அடைகின்ற போது சைவம் எம்மாதிரியான கல்வியை மக்களுக்குப் போதிக்க வேண்டும் என்பதனை பெரிய புராணம் ஐந்தே அகவை எய்திய சண்டேசுவரர்க்கு அவருடையப் பெற்றோர் ஆகமக்கல்வி கற்பித்ததாகக் குறிப்பிடுகின்றது (பெரியபுராணம்:12:36:13). ‘உள்ளம்நிறை கலைத்துறைகள் ஒழிவின்றிப் பயின்றவற்றால் தெள்ளிவடித் தறிந்தபொருள் சிவன்கழலிற் செறிவு' (பெரியபுராணம்: 12:36:4) என்றும் ’ஆயுள் வேதக் கலையும் அலகில் வடநூற்கலையும் தூய படைக்கலைத் தொழிலும் துறை நிரம்பப் பயின்றதாக' (பெரியபுராணம்: 12:36:3) விவரிக்கின்றார் சேக்கிழார் பெருமான். ஆயுள்வேதக்கலை என்றது குலக்கலையைக் குறிப்பது. அது இவ்வணி வாழ்வின் ஆதாரமன்றோ! வடநூல் கலை என்றது சமயக் கல்வியேயாம். தூயபடைக்கல தொழில் என்பதோ தொழில் கல்வியைக் குறிக்கும். ஆதலால் இவ்வுலகிற்கு பொருட்செல்வம் ஈட்ட

உலகக் கல்வி முகான்மையானதே ஆனாலும், உயிரை உய்வுரச் செய்வது சமயக் கல்வியே! ஆதலால், சிறுத்தொண்டர் புராணத்திலும் உலக கல்வியைக் கொண்டு சிவம் எனும் மெய்ஞானத்தை குழந்தை பருவம் முதலே கற்றல் நன்று என்று சேக்கிழார் குறிப்பிடுதல் காண்க.

இப்படி நம் பிள்ளைகளையும் சிறு வயது முதலே சைவத்தைப் பயிற்றுவித்து வளர்ப்பது அவசியம். ஔவை பிராட்டி 'பிச்சை புகினும் கற்கை நன்றே!' என்றது. நாம் அந்த அளவிற்குச் செல்லா விட்டாலும், தற்போது நேரில் மட்டும் அல்லாது இணையத்தின் வாயிலாகவும் சமய வகுப்புகள் நடந்தேறி வருகின்றன. அவைகளை கண்டறிந்து குழந்தைகளை அதில் ஈடுபடுத்த வேண்டும்.

### விளையாட்டு

குழந்தைகள் விளையாடுதலை மனம் உவகையித்து செய்வர். மாணிக்கவாசக பெருந்தகை சிவபெருமானை மையப்படுத்தி பல வகையான விளையாட்டுகளை அவரது திவாசகத்தில் குறிப்பிட்டிருக்கின்றார். திருஅம்மானை, துருபொற்சுண்ணம்,திருக்கோத்தும்பி, திருத்தெள்ளேணம், திருச்சாழல், திருப்பூவல்லி, திருவுந்தியார், திருப்பொன்னூசல் என்பன அவையில் சிலவாம். இதனை பெரிய புராணத்தில் வாழ்ந்து காட்டியவர் காரைக்கால் அம்மை. இவர் சிறுமியாய் இருந்த போது, 'வண்டல் பயில்வனவெல்லாம் வளர் மதியம் புனைந்த சடை அண்டர்பிரான் திருவார்த்தை அணைய வருவன பயின்றிருந்தார்' (பெரியபுராணம்:12:25:5) என்று சேக்கிழார் பெருமான் குறிப்பிடுவார். சிற்றில் கட்டி விளையாடும்போதும் எப்போதும்ம் விளையாடும் விளையாட்டுகள் யாவையிலுமே வளரும் பிறைமதியைச் சூடிய சடையினை உடைய தேவர்களுக்குத் தலைவனாகிய சிவபெருமானின் திருவார்த்தை களையே சொல்லி சகச் சிறுமியர்களோடு விளையாடும் பாங்கினைக் கொண்டவர் காரைக்கால் அம்மை.

### வழிபாடு

தொட்டில் பழக்கம் சுடுகாடு மட்டும் என்பது பழமொழி. பெற்றோர்கள் குழந்தைப் பருவம் முதலே நாளும் தவறாது இறைவனை வழிபட பழக்கப்படுத்த வேண்டும். இதற்கு சைவ சமயம் நமக்கு ஏற்படுத்தித் தந்துள்ள எளிய முறையானது தீக்கை பெறுதல்.

வேதிய சிறார்களுக்கு 'உபநயனம்' எனப்படும் பூணூல் அணிவிப்பு நிகழ்வு எவ்வளவு இன்றி அமையாததோ அது போல 'சைவசமயி' எனத் தங்களைக் குறித்துக்கொள்ள விரும்பும் தமிழ் மழலையர்களுக்குச் சமயத்தீக்கைத் தலைமையானது. இது எது போல் எனில் பூணூல் அணியார், வேதியர் ஆகார்; அவ்வாறே 'சமயத்தீக்கை' பெறாதவர் சைவர் ஆகார். இதைச் சைவ சமய நுழைவுக்கு அனுமதி பெறும் கரணம் என்கிறது சைவம் (வித்துவான் வைத்தியநாதன்.கு, 1999 ப.195). தீக்கை சைவச் சிறுவர்களுக்கும் சிறுமியர்களுக்கும் நான்கு அகவையில் இருந்து ஏழு அகவைக்கு உள்ளாக நிகழ்த்தப்பெறும். தீக்கைப் பெறுவதன் வழி ஒருவர் அவர்தம் வாழ்க்கையில் ஓர் உறுதியினை எடுத்துக் கொள்கின்றார். அதாவது இத்தீக்கைக் கரணம் நடத்துவிக்கப் பெற்ற நாளில் இருந்து இனி நான் இறக்கும் வரை ஒரு நாளைக்குக் குறைந்தது இரண்டு வேளையாவது தவறாமல் இறைவழிபாடுச் செய்வேன் என்று உறுதிமொழி எடுத்துக்கொள்வதே ஆகும். தவிர, இறைவனை நினைப்பிக்கும் சிவ

அடையாளங்களானச் சிவலிங்கத்தையும் அடியார்களையும் திருநீற்றையும் கணிகை மணியையும் சிவமாகவே பணிவேன் என்ற உறுதி எடுத்துக் கொள்வதும் இதில் அடங்குகிறது.

இதைத் தவிர, இறைவனை நினைப்பிக்கும் திருநீற்றினை நாளும் தவறாமல் அணிந்து, திருமுறைகளையும் அஞ்செழுத்தையும் ஓதிய பின்பே உணவு உட்கொள்வேன் என்ற உறுதிப்பாடும் இக்கரணத்தின் வழி வலியுறுத்தப்படுகின்றது. அன்பு நெறியான சிவநெறியினைத் தலைமேற்கொண்டு பிற உயிர்களிடத்து அன்பும் மற்ற உயிர்களைத் தன் உயிர்போல் மதித்தலையும் பின்பற்றிச் சைவசமய நெறிக்குப் புறம்பானச் செயல்களை, மனம், வாக்கு, காயத்தினால் ஒரு போதும் செய்ய மாட்டேன் என்று உறுதிகொள்ளுதலும் இதன்வழி அறிவுறுத்தப் படுகின்றது (தர்மலிங்கம்.ந. 2017.ப.22).

**கேள்வி**

கேள்வி என்பது கல்விக்கு அடிப்படையான ஒன்று. பண்டைய உலக மாந்த வரலாறு ஒருவன் தன் கல்வி மற்றும் அறிவுசார் அடைவினையும் கேட்டல் வழியே கற்றிருக்கின்றான் (எட்னா லியு ஃபியுர்னஸ் , 1956). வள்ளுவப் பேராசான் கல்வியைப் பற்றிக் கூறும் வரிசையில் கேள்வி என்று ஒரு அதிகாரத்தையே நமக்குப் பகருகின்றார். அதில் முதல் குறளிலேயே, 'செல்வத்துள் செல்வம் செவிச்செல்வம் அச்செல்வம் செல்வத்துள் எல்லாம் தலை' என்கின்றார் (குறள்:411). அதாவது ஒருவரிடம் என்ன மாதிரியான விலை மதிபிற்குரியப் பொருள் இருந்தாலும், அவை எல்லாம் கேட்டல் வழி கற்றதை விட குறைவான மதிபுடையது என்று கேட்டலை உயர்வாகச் சொல்கின்றார்.

மேலும், ஒருவனுக்குக் கேட்டுக் கற்றுக் கொள்ள ஒன்றும் இல்லாத பொழுதே கொஞ்சம் வயிற்றுக்கு உணவு தரப்படும் என்பதை, 'செவிக்கு உணவு இல்லாத போழ்து சிறிது வயிற்றுக்கும் ஈயப் படும்' (குறள்:412) என்ற குறளில் தெளிவிக்கின்றார். உயிர் தாங்கி இருக்கும் உடலைப் பேணுதலை விட கேட்டல் வழி அறிவைப் பேணுதலை வலியுறுத்துகின்றார். திருமுறைகளில் திருநாவுக்கரசர், 'செவிகாள் கேண்மின்களோ, சிவன் எம்மிறைச் செம்பவள எரிபோல் மேனிப் பிரான் திறம் எப்போதும் செவிகாள் கேண்மின்களோ!' (4:9:3) என்கிறார். இதில் செவிகளே! சிவபெருமானுடையத் திருக்கோலங்களையும் பண்புகளையும் அருட்செயல்களையும் எப்பொழுதும் கேளுங்கள் என்று அறிவுறுத்துகின்றார். மற்றொரு பாடலில் 'இளைய காலம் எம்மானை அடைகிலாத் துளையிலாச் செவி' என்று இளம் பருவம் முதலே சிவபெருமானைக் கேட்டுப் பயிலாதவர்களுக்கு அவர்தம் செவிகளில் ஓட்டையே இல்லை; ஆதலால் அவர்கள் கேட்கும் திறனற்றவர்கள் என்று கடுமையாகக் கூறியுள்ளார் (5:66:3). தவிர, திருமூலரும் கூட இதே சிந்தனையை வழிமொழிதல் புலப்படுகின்றது. 'சிவன்பணி கேட்பவர் தேவரும் ஆவர் பயன்பணி கேட்பது பற்றது வாமே' என்ற வரிகள் மூலம், மாந்தப் பிறப்பின் பயனே உயிர்க்கு உறுதுணையாவதும் சிவபெருமானை வழிபடும் முறையைக் கேட்டலேயாம் என்கின்றார் (10:24:3).

மலேசியாவில் ஏறத்தாழ 2500க்கும் மேற்பட்ட கோவில்கள் இருக்கின்றன (அருனோ.சி, பவித்திரா ராமன், அரவிந்தன்.ஆர், 2022). ஒவ்வொரு கோயிலிலும் குறைந்த அளவு வெள்ளிக்கிழமைகளிலாவது சொற்பொழிவுகள் ஏற்பாடு செய்யப்படுகின்றன. கோயில்களிலோ, சமய நிறுவனங்களிலோ சமயச் சொற்பொழிவுகள் நடைபெறும்பொழுது பெரியோர்கள் குழந்தைகளையும் கூட்டிச் சென்று அவைகளைக் கேட்கச் செய்ய வேண்டும்.

தவிர நமது இல்லங்களில் சைவர்களுக்கே உரிய அரும் அருட்களஞ்சியமான பெரியபுராணம், திருவிளையாடல் புராணம், திருமுறை சித்தாந்த சைவ நூல்கள் என பலவகையான ஆழ்ந்த கருத்துக்களைக் கொண்ட நூல்களைச் சிறு வயது முதலே பிள்ளைகளுக்குப் புகட்ட வேண்டும். இன்றைய குழந்தைகள் சமய சிந்தனையிலும் மற்றும் இறையுணர்விலும் குன்றிக் காணப்பட்டாலும், அறிவிலும் ஆற்றலிலும் பெரியவர்களான நம்மை விட பலமடங்குச் சிறந்தும் மேம்பட்டும் திகழ்கின்றனர். இந்நிலை நமக்குப் பெருமிதத்தையும் மன உவகையையும் அள்ளித்தந்தாலும் அறிவில் வளர்ச்சியுற்றும் குமுகாய நல்லொழுக்கத்தில் சீர்கேடுற்றும் இருத்தல் அவலமே! ஆகையால் நாம் நம் குழந்தைகளுக்குத் திருமுறைகளையும் சித்தாந்தச் சாத்திரத்தையும் அறிவியல் கண்ணோட்டத்துடனும் சமுதாயக் கண்ணோட்டத்துடனும் அணுகி ஆராய்ந்து வளரும் இளையச் சமுதாயத்திற்கு அவர்கள் கேட்க விரும்பும் வகையில் கவர்ச்சியாகக் சொல்லல் வேண்டும்.

எடுதுக்காட்டாகக் குழந்தைகள் அதிகமாக விரும்பும் அண்டங்கள், கோள்கள் பற்றிய செய்திகள் திருவாசகத்தின் திருவண்டப்பகுதி என்ற தலைப்பின் கீழ் உள்ளது. இன்றைய வானவியல் சொல்வதை விட அதிகமாக கோள்களின் பிரமாண்டத்தை விரித்துரைதிருக்கின்றமையை மழலையைகளுக்கு விவரரிக்கலாம். 'சூப்பர் ஹீரோ' கதைகளுக்கு மத்தியில் கந்தப்புராணத்தில் சூரபதுமனை போரில் வீழ்த்த வந்த முருகப்பெருமானின் அகண்டிதத்தைச் கச்சியப்ப முனிவர் அதிரடியாய்,'உள்ளடி வரைகள் யாவும் ஒண்புற வடியின் நீத்தம், வள்ளுகிர் விரல்கள் முற்றும் வான்உரு மேறு நாள்கோள், எள்ளரும் பரடு தன்னில் இரும்புனற் கிறைவன் சோமன், நள்ளிருள் அனைய மேனி நிருதியோ டரக்கர் நண்ண' சித்தரிக்கின்றார் (கந்தபுராணம்: சூரன் வதை படலம்:423). இப்பாடலில் சூரபதுமனுடன் போரில் நிற்கின்ற முருகப்பெருமான் அவரது அகண்டித வடிவத்தை அவனுக்குக் காட்டுகின்றார். அதில் முருகப் பெருமானின் மயிர்க்காம்புகளில் கதிரவன் சந்திரன் நிருதி என அனைத்துக் கோள்களும் தொங்குகின்றன. இம்மாதிரியான பிரமாண்ட காட்சியை மார்வெல் திரைபடங்கள் கூட காட்சிப்படுத்தியது இல்லை. அதனை நம் பிள்ளைகளோடு பகிரலாம்.

**சைவ விழாக்கள்**

சைவ சமயத்தில் மாதம் தோறும் ஏதோ ஒரு சமயம் சார்ந்தப் பண்டிகைக் கொண்டாடப்படும். சைவ பண்டிகைகளில் பங்குக் கொள்வதன் முகான்மையைத் திருமுறைகள் மிக அறுதியிட்டு நிறுவும். அந்த வகையில், திருஞானசம்பந்தர் பூம்பாவையை உயிர்பெறச் செய்த 'மட்டிட புண்ணயங்' என்ற பதிகத்தில், பூம்பாவை திருவிழாக்கள் காணாது மாண்டது இழப்பு என்று சைவ விழாக்களின் பட்டியலை விவரிக்கின்றார். தமிழரின் தமிழ்ப் புத்தாண்டு முதல் திங்களில் தொடங்கி தையில் 'தைபூசத்தயும்', மாசிக் 'கடலாட்டுக் கண்டான்' கபாலீச்சரம் என்றும், 'பங்குனி உத்திர நாள் ஒலிவிழாக் காணாதே போதியோ' என்றும், சித்திரையில், 'பண்ணார் பதினெண் கணங்கள் தம் அட்டமி நாள்' என்றும், வைகாசியில் 'பொற்றாப்பு' என்றும், புரட்டாசியில் 'அட்டிடல்' என்றும், ஐப்பசி 'ஓணவிழாவையும்', தொல் கார்த்திகை நாள் 'விளக்கீடு பண்டிகையையும்', மார்கழியில் 'ஆதிரை பெருவிழாவையும்' சொல்லி ஒரு வருடத்திற்கான மாதாந்திரப் பண்டிகைகளினை தெளிவிக்கின்றார். (2:47:1).

சிறுவர்களுக்குப் பெற்றோர் சைவ விழாக்களையும் பண்டிகைகளையும் பற்றி எடுத்துரைக்க வேண்டும். அவை கொண்டாடப்படும் நோக்கம், கொண்டாடப்படும் முறை, அவை நமக்கு விளம்பும் தத்துவம் என்ன என்று நாம் அறிந்து பிள்ளைகளுக்கும் சொல்ல வேண்டும்.

சேக்கிழார் பெருமான் பெரியபுராணத்தில் மாந்தராய் பிறந்தார் பெறும் பயன் இரண்டு என்று குறிப்பிடுகின்றார். அவற்றுள் ஒன்று இவ்வவனியில் உள்ள திருக்கோவில் திருவிழாக்களைக் காண்பதேயாம். திருநாவுக்கரசர் திருவாவூர் தேர் திருவிழாவைச் சித்தரிக்கையில், 'வணங்கி நின்று வானவர் வந்து வைகலும் அணங்கனாரூ ராதிரை நாளால் அது வண்ணம்' என்று தேவர்களும் இப்புவி மீதினில் வந்து சிவபரம்பொருளைத் திருக்கோவில் திருவிழாக்களில் வழிபடுவதாகக் குறிப்பிடுகின்றார் (4:21:4). இவ்வளவு சிறப்பாக சொல்லப்படும் சைவ விழாக்களை நாமும் கோலாகலமாகக் கொண்டாடி நம் மக்கட்கு அதன் பால் ஈர்புறச் செய்தல் வேண்டும்.

**குருபூசைகள்**

சித்தாந்த சைவம் ஓர் உயிர் உய்வு பெறுகின்ற நிலையை வீடுபேறு என்கிறது. ஒருவருக்கு வீடிபேறு கிட்ட இறைவனின் திருவருள் தேவை. நம்போன்று இப்புவி வாழ் உயிர்களுக்கு அத்திருவருளே நாம் சமய அறிவை பெருக்கிக் கொள்ள துணையாகக் குருவாய் வரும் என்று சித்தாந்த சைவ நூல்கள் தெளிவிக்கும். தவிர, 'கு' என்பது இருள் 'ரு' என்பது இருளை நமக்கு உணர்த்தி, அதனை நீங்குவதற்கான ஒளியைக் கொடுத்து, வழிகாட்டும் பேருதவி புரியும் சுடரொளி (சிவஜோதி முருகேசு,2018). சுருங்கக்கூறின், இந்த உலகில் சிக்கி உழலும் நமக்கு, சமயம்சார் ஞானத்தினை நல்கி, சிவநெறியில் இட்டு செலுத்தும் அருள் விளக்கே சைவம் சொல்லும் குருவருள் ஆகும். இக்குருவருள் உருவத் திருமேனி கொண்டு வருதலை நாம் திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர், மணிவாசகர், சேக்கிழார், இதர திருமுறை ஆசிரியர்கள், சந்தானக்குரவர்கள், 63 நாயன்மார்கள் என்றெல்லாம் அறிகின்றோம்.இவர்கள் இறைவனோடு கலந்த நாட்களை நாம் குருபூசை என்று கொண்டாடுகின்றோம். அன்றையத் தினம் நாம் அவர்களையும் அவர்கள் நமக்குக் காட்டிச் சென்ற மெய்நெறி வாழ்வியல் கோட்பாடுகளையும் எண்ணிப்பார்க்கின்றோம்.

இந்தக் குருபூசை கொண்டாட்டம் நாம் நம் குழந்தைகளிடையே நமது சமய ஆசிரியர்களை அறிமுகப்படுத்துவதற்கான ஒரு சீரிய வழி.முதலில் நாம் நம் குழந்தைகளுக்குக் குருபூசையின் தத்துவத்தை உணர்த்துதல் அடிப்படை. மேலும், இந்தக் குருபூசைகளைச் சிலர் கூடி ஒருவரின் வீட்டில் கூட்டு வழிபாடாகச் செய்யலாம். அதில் நமது குழந்தைகளைச் சமய ஆசிரியர்கள் சொல்லிச் சென்ற பாடல்களைப் பாடச்செய்தல் அல்லது அந்த பாடல்களுக்கு ஆடச் செய்தல், அவரின் வரலாற்றை எல்லோரிடமும் பகிரச் செய்தல் அல்லது சில குழந்தைகள் இணைந்து நாடகமாக நடிக்கச் செய்தல் என பல்வேறு வகைகளில் சிறார்களை ஈடுபடுத்தலாம். அவர்களின் படைப்பை நன்றாக செய்தவர்களை ஊக்குவிக்கும் வகையில் சிறிய் பரிசுகளைப் பரிமாறிக்கொள்ளலாம்.


**சைவ சமய சிறப்பு**

தற்போதய சிறுவர்கள் பெரும்பாலும் மேலைநாட்டவர்களை உயர்வாகப் பார்த்தல் இயல்பு. இம்மேலை நாடுகளைச் சேர்ந்த பல அறிஞர்கள் நம் தமிழ்ச் சைவத்தைப் பெரிதும் போற்றியிருக்கின்றார்கள். எடுத்துக்காட்டாக, திருவாசகம் எனும் மணிவாசகர் இயற்றிய நூல். வெள்ளையர் ஆட்சி காலத்தில் முதன் முதலில் அச்சிடப் பட்ட நூல்களில் ஒன்று (Ramachandran, 1997). ஜி.யு.போப் என்கின்ற கிருத்துவ மத போதனையாளர் தமிழகத்திற்குத்

தமிழர்களை மதம் மாற்ற வந்த போது, தமிழ் கற்றுக்கொள்ள நேர்ந்தது. அதில் அவர் உருகி உருகி படித்த நூல் திருவாசகம். சைவ சித்தாந்த தத்துவவியல் திராவிட அறிவுத்திறனின் சிறந்த விளைபொருளாகக் கருதபடுகிறது. இந்தியாவின் அனைத்து மதங்களிலும் சைவ சித்தாந்தம் மிகவும் விரிவானது, செல்வாக்கு மிக்கது மற்றும் சந்தேகத்திற்கு இடமின்றி மிகவும் உள்ளார்ந்த மதிப்புமிக்கது என்கிறார் ஜி.யு.போப் அவர்கள் (Pope, Rev. G.U. 1900 p.lxxiv). ஜெர்மனிய அறிஞர் காமில் சுவாலபில் குறிப்பிடுவதாவது, "மனித குலத்தின் சிந்தனையிலே முழுநிறைவானதும், மூதறிவார்ந்ததுமாகப் பெருதும் மதித்து போற்றதக்கதாக விளங்குவது சைவசித்தாந்தமேயாகும்" (முருகவேல், 1984). இக்கட்டுரையில் குறிப்பிடப்பட்டவை தமிழ்ச் சைவ சமயத்தைப் பற்றி மிக முதன்மையானப் பிற இன அறிஞர்கள் குறிப்புக்களே! சைவ சமயமானது பல அரிய சிறப்பு வாய்ந்தது.

இதனை பெற்றோர்கள் இளம் வயது முதலே பிள்ளைகளுக்குப் புகட்டி வந்தால், எதிர்கால தமிழ் குமுகாயம் தமிழ்ச் சைவ சமயத்தின் பால் அசைக்க முடியாத பற்றினை ஏற்றிருக்கும். சைவ சமயம் பெருமையுடன் கலந்து இளையோர் உள்ளத்திலும் சிந்தையிலும் உணர்வாய் திகழும்.

அட்டவணை 1
*சமயத்தை வரும் தலைமுறைக்கு கொண்டு செல்ல சைவம் காட்டும் வழிமுறைகள்*




**இன்றையப் பெற்றோர்கள்**

தற்போதையச் சூழ்நிலையில் குழந்தை வளர்ப்பு என்பது மிகக் கடுமையான ஒன்றாக இருக்கின்றது. அலுவலகம் மற்றும் குடும்ப அலுவல்களில் சிக்கி நேரமின்மையால் அவதியுறும் பெற்றோர்களுக்கு அதிகமான நேரம் குழந்தைகளோடு செலவிடக் கிட்டுவதில்லை. முன்புபோல் இன்றைய குமுகாயம் கூட்டு குடும்பமாகவும் வாழ்வதில்லை. இந்நிலை சிறார்கள் வீட்டில் ஓய்வு பெற்று அறிவில் முதிர்த்திருக்கும் பெரியவர்களோடு பழகுவதையும் நலியச் செய்துள்ளது. இதனால் மேல் குறிப்பிடப்பட்ட அனைத்து வழிமுறைகள் பயனளிப்பவை ஆயினும் அதனைப் பெற்றோர்கள் அமலாக்கம் செய்வது கடினமாக இருக்கின்றது.


இருப்பினும் இந்த நவீன காலம் நமக்குப் பல்வேறு பல்லூடகங்களைத் தொழில்நுட்பம் வாயிலாக ஏற்படுத்தித் தந்துள்ளது. இன்றைய இளம் பெற்றோர்களும்

குழந்தைகளும் அவைகளைச் செவ்வனே பயன் படுத்திக்கொள்வதன் மூலம் சமய உணர்வை எதிர்காலத் தலைமுறையினரிடம் சீரிய முறையில் சேர்க்கலாம்.

நீகுழாய்களில் (Youtube) பல சமயக் கேளிக்கைச் சித்திரங்கள் இயங்கு படம் போன்றவைக் காணக்கிடைக்கின்றன. தவிர, சில சமய ஆர்வலர்கள் சமய சார்பு கொண்ட மழலையர் கதைகளையும் வெளியிட்டு வருகின்றனர். இவைகளைச் சிறு குழந்தை பருவம் முதலே பெற்றோர்கள் பாலூட்டும் போதும், உறங்கும் முன்னும், பொழுது போக்காகவும் அவர்தம் குழந்தைகளுக்கு அறிமுகப்படுத்தலாம். இன்றையக் குழந்தைகளும் இளம் பருவம் முதலே நுண்திறன் கருவிகளை மிக நேர்த்தியாக இயக்கும் ஆற்றலைப் பெற்றிருக்கின்றனர். இதனைப் பெற்றோர்கள் சமய உணர்வைப் பெருக்குவதற்குப் பயன்படுத்திக் கொள்ளலாம்.

பெற்றோர்கள் தத்தம் சமய அறிவினைப் பெருக்கிக்கொள்ள இயங்கலை வாயிலாக நடைபெறும் சமய வகுப்புகளில் கலந்துகொள்ளலாம். இன்றையச் சூழலில் எண்ணில் அடங்கா சமய வகுப்புகள் பல்வேறு நாடுகளில் உள்ள புலைமிக்க அறிஞர்கள் மூலம் நடை பெறுகின்றன. ஒய்வு கிட்டும் வேலைகளிலாவது சமய கல்விக்கு முதன்மை தந்து பெற்றோர்கள் அவர்களது சமய அறிவினைப் பெருக்கிக் கொண்டால் நேரம் கிடைக்கும் பொழுதில் எல்லாம் சமய சிந்தனைகளைக் குழந்தைகளோடு பகிர்ந்துகொள்ள முடியும். இவராக செயல்படுவதன் மூலம் மேற்குறிப்பிடப் பட்டவற்றில் சிலவையாவது நமக்குச் சாதகமாகி சைவ சமய உணர்வை வரும் தலைமுறையினர்களுள் வித்திட்டிட முடியும்.

அட்டவணை 2
*சைவசமயத்தை அடுத்த தலைமுறையினரிடம் கொண்டு செல்லும் வழிகள்*




**முடிவுரை**

அன்றைய காலத்தில் எப்படியெல்லாம் பெற்றோர்கள் அவர்களைத் தொடர்ந்து வரும் அடுத்த தலைமுறையினர் சைவராய் வாழ வகைச்செய்துள்ளனர் என்பதை இவ்வாய்வு புலப்படுத்துகின்றது. தற்காலத் தமிழ்ப் பெற்றோர்கள் இதன் முகான்மையை உணர்ந்து சைவ நூல்களைக் கற்றல் வேண்டும். பன்முக துறையில், மொழியில், கலைகளில் குழந்தைகளின் மேம்பாட்டிற்கு அரும்பாடு படும் பெற்றோர்கள் தம் குழந்தைகள் அடிப்படையில் ஒரு தமிழ்ச் சைவராய் வாழ வித்திடுதல் வேண்டும். இது ஒரு அறிவுசார் அன்புசார் மற்றும் பண்புசார் முதிற்ச்சியுற்ற தனிமனிதர்களை வடிவிக்கும். இப்படியான பெற்றோர்களாக இருக்க விரும்பும் இன்றைய இளைஞர்களுக்கு, அவர்களின் முயற்ச்சிக்கு கோவில்களும் சைவ சமயம் சார்

அமைப்புகளும் உறுதுணையாகவும் அவர்களுக்கு மேலும் சமய அறிவை ஊட்டும் கருவூளமாகவும் திகழுதல் இனி வரும் அறிவார்ந்த இளைய தலைமுறையினர் சைவராய் வாழ்வதை உறுதிப்படுத்தும்.

## References


Adam Eshleman. (2009). Probing Question: Can babies learn in utero. Retrieved from: https://www.psu.edu/news/research/story/probing-question-can-babies-learn-utero/

Aruno.C., Pavithra Raman, Aravinthan.R. (2022). Old Hindu temples urged to register with the portal. The Star.

Darmalingam.Na (2017). Thirumanthira Thenamuthu. Kuala Lumpur: Association of Saiva Narpani Malaysia.

Edna Lue Furness. (2009). Listening and learning, Peabody Journal of Education. DOI: 10.1080/01619565609536659

Georgious.S, Dolores.R., (2010). Stories as a tool for teaching and learning in CLIL, Nicosia: Cyprus Pedagogical Institute.

Kanthapuranam. Surapathuman Vathai padalam. (1965) Yarlpanam: Sri Shanmuganatha Printers.

Kyung Yeon Lee, Ja Heong Kim. (2016). Effect of Breastfeeding Duration on Cognitive Development in Infants: 3-Year Follow-up Study. Journal of Korean Medical Sciences.31(4): 579–584doi: 10.3346/jkms.2016.31.4.579

Murugavel.N.R. (1984). Saiva Siddhandam. chennai: Sheikilar publications.

Pamela Rutledge. (n.d). Story Power: The Psychology of Story.The Psychology Of Digital Behaviors. Retrieved from: https://www.pamelarutledge.com/story-power-the-psychology-of-story/

Periyapuranam (1999). Chennai: Ganggai BookStore.

Pope, Rev. G.U. (1900). The Tiruvacagam. Oxford: Clarendon Press

Ramachandran, T.N., (1997). Thiruvasagam. Araichi Urai. Manivasagar Thiruvasagam, Dharmapuram: Gnanasambandam Press.

Rebacca Parlakian, Sarah S. MacLaughlin. (2019). Read Early and Often. Zerotothree.org Retrieved from: https://www.zerotothree.org/resource/read-early-and-often/

Sakthivel. Su, (2010). Nattupura Iyal Aivu. Chennai: Manivacakar Publication

Sivajothi Murugesu. (2018). Saiva Samaya Saathira Thottira Katturaikal. Kuala Lumpur: Vishal Print Trading.

Soleimani, H., Akbari, M. (2013). The Effect of Storytelling on Children ' s Learning English Vocabulary: A Case in Iran. Retrieved from: http:// is.muni.cz/th/104598/pedf_m/?lang=en

Thiruvarutpayan (1976). Chidambaram. Sivagami Publication.

Tirukkural (1998). Chennai: Appar Publication.

Tirumantiram (2004). Chennai: Poompukar publication

Tirumurai 4 (2004). Chennai: Nyanasambantham Publication.Dharumai Mutt

Vaithiyanathan, Ku. (1999). Tirumuraikalil Saiva Siddhantham. Tiruvavaduthurai. Srinamachivayamoothry offset Printers.

Wasik, B. A., & Bond, M. A. (2001). Beyond the pages of a book: Interactive book reading and language development in preschool classrooms. Journal of Educational Psychology, 93(2), 243–250. https://doi.org/10.1037/0022-0663.93.2.243